எனக்கு விநோத மேசை கிடைத்தால்...

அப்பா வாங்கித்தந்த ஆங்கில மர்மக் கதை புத்தகம் ஒன்றினை அன்றுதான் வாசித்து முடித்தேன். அடேயப்பா! [ ] எத்தனை விநோதங்கள்... எத்தனை மர்மங்கள்.. என் மனத்திலும் ஓர் [ ] தோன்றியது. எனக்கு ஒரு விநோத மேசை கிடைத்தால்.. ஆம்! எனக்கு [ ] மேசை கிடைத்தால் ஒவ்வொரு நாளும் உண்ணும் நேரத்தின் போது பலவகையான [ ] அம்மேசை மீது தயாராக இருக்கும்படி செய்வேன். இதனால், தினமும் ஓய்வில்லாமல் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்யும் என் [ ] சற்று ஓய்வு கிடைக்குமல்லவா!

என் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து [ ] உணவுகளைச் சுவைக்க வேண்டும். உண்டபின் விநோத மேசை மீண்டும் முன்பு போல காட்சியளிக்க வேண்டும். நான் விரும்பிய [ ] எல்லாம் என் விநோத மேசை உருமாற வேண்டும். நான் பள்ளி செல்லும்போது என் விநோத மேசை மீது [ ] பறந்து செல்ல வேண்டும். பள்ளியை அடைந்ததும் விநோத மேசை தனது [ ] மடக்கிக் கொள்ள வேண்டும். இதனால், நான் வாகன நெரிசலில் சிக்கிக் கொண்டு தவிக்க நேரிடாது அல்லவா!

ஓய்வுநேரத்தில் என்னை ஏற்றிக்கொண்டு என் விநோத மேசை வானத்தில் பறக்க வேண்டும். இறைவன் படைத்த [ ] அழகை நான் கண்டு இரசிக்க வேண்டும். எனக்குக் கிடைத்த விநோதமான இந்த மேசையைக் கண்ணுங்கருத்துமாய் நான் காத்திட வேண்டும்.

| அமர்ந்து | உருவத்தில் | இயற்கை | தாயாருக்குச் |
|---|---|---|---|

| எண்ணம் | உணவுகள் | அறுசுவை | விநோத | இறக்கைகளை | கதையில் |
|---|---|---|---|---|---|

LIVEWORKSHEETS